දුරකථන ) 2698475
தொலைபேசி ) 2698490
Telephone ) 2698507

ෆැක්ස් ) 2692913
பெக்ஸ் ) 2693869
Fax )

විද්‍යුත් තැපෑල )
மின்னஞ்சல் முகவரி ) postmaster@health.gov.lk
e-mail )

වෙබ් අඩවිය )
இணையத்தளம் ) www.health.gov.lk
website )


සුවසිරිපාය
சுவசிரிபாய
SUWASIRIPAYA

මගේ අංකය )
எனது இல ) NCCP/GOSL/29/2018
My No. )

ඔබේ අංකය )
உமது இல )
Your No. : )

දිනය )
திகதி ) 21.07.2018
Date )

# සෞඛ්‍ය, පෝෂණ හා දේශීය වෛද්‍ය අමාත්‍යාංශය
# சுகாதாரம், போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு
# Ministry of Health, Nutrition & Indigenous Medicine

---

சுற்றறிக்கை 02-176/2018

கடித இல:

அனைத்து மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்களுக்கும்,
அனைத்து பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்களுக்கும்,
சுகாதார மருத்துவ அதிகாரிகள் உட்பட அனைத்து திணைக்களத் தலைவர்களுக்கும்,

## புற்றுநோய் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டுக்கான முக்கியஸ்தர்களை கௌரவிக்கும் தேசிய விழா - 2018

தொற்றா நோய்களுக்கு இடையில் புற்றுநோய் பிரதான இடத்தை வகிப்பதுடன், உலகெங்கிலும் மற்றும் இலங்கையிலும் தொற்றா நோய் காரணமாக நிகழும் இறப்புக்களிற்கு புற்றுநோய் பிரதான காரணமாகும். இலங்கையில், தேசிய புற்றுநோய் புள்ளிவிபரங்களின் பிரகாரம், புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்து வருவதுடன், அது 2010 ஆம் ஆண்டளவில் ஒரு இலட்சம் நபர்களிற்கு 82.1 நோயாளர்கள் என்றவாறு அமைந்துள்ளது.

பெண்களைப் பீடிக்கும் புற்றுநோய்களில் அதிகமானவை முறையே, மார்பக, கருப்பைக் கழுத்து, தைரொயிட், சூலகம், மற்றும் வாய் (உதடு, வாய்க்குழி மற்றும் குரல்வளை) புற்றுநோய்களாகும். ஆண்களைப் பீடிக்கும் புற்றுநோய்கள் அதிகமானவை முறையே (கழுத்து, வாய்க்குழி மற்றும் குரல்வளை) சுவாசக் குழாய், சுவாசக்குழாய் மற்றும் நுரையீரல், களம், பெருங்குடல் மற்றும் குதம், விதைப்பை புற்றுநோய் என்பவை அடங்கும்.

இப்புற்றுநோய்களில் அதிகமானவற்றை முன்கூட்டியே இனங்காண்பதன் மூலம் தடுப்பதற்கு அல்லது சிகிச்சைகள் மூலம் குணப்படுத்திக்கொள்ள முடியும். புற்றுநோய்களில் மூன்றில் ஒன்றை நல்ல சுகாதாரப் பழக்க வழக்கங்கள் மற்றும் நல்ல சுகாதாரச் சூழல் என்பவற்றின் மூலம் தடுத்துக்கொள்ள முடியும் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் மூன்றில் ஒன்றை முன்கூட்டியே இனங்காண்பதன் மூலம் குணப்படுத்திக்கொள்ள முடியும். புற்றுநோய் ஏற்படுவதற்குக் காரணமாக அமைகின்ற பிரதான காரணிகளில் புகையிலை பாவனை, மதுபாவனை, சுகாதாரமற்ற உணவுப் பழக்கம் மற்றும் உடற்பயிற்சிகளில் ஈடுபடாமை என்பன பிரதான இடம் வகிப்பதுடன், தேவையற்ற ப்ழக்க வழக்கங்களை மாற்றுவதன் மூலம் புற்றுநோயைத் தடுத்துக்கொள்ள முடியும்.

யாதேனும் ஒரு நபரிற்கு குணப்படுத்த முடியாத புற்றுநோய் என நிர்ணயிக்கப்பட்டதன் பின்னர் அந்த நோயாளிக்கு நிவாரண சேவைகளை வழங்கப்படல் வேண்டும். அதன் மூலம் அவரது வாழ்க்கையின் தரம் அதிகரிக்கப்படும். நிவாரண உதவிச் சேவையானது இலங்கையினுள் முழுமையாக விஸ்தரிக்கப்படாத போதிலும் அரசாங்கத்தினால் சுகாதார ஊழியர்கள் மற்றும் புற்றுநோயாளர்களுக்கு நிவாரண சேவையை வழங்குகின்ற நபர்களிடையே நிவாரண சேவையை பிரபல்யமாக்கும் நிகழ்ச்சித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

புற்றுநோயை தடுத்தலில் மற்றும் முன்கூட்டியே இனங்காணுவதில், வெளிக்கள சுகாதாரப் பணியாளர்கள் முக்கிய பங்காற்றி வருகின்றனர். புற்றுநோய் ஏற்படுவதற்கான பிரதான மிக மோசமான காரணிகள் பற்றி மக்களை விழிப்பூட்டல் மற்றும் நடத்தை ரீதியான மாற்றங்களின் ஊடாக மேற்படி காரணிகளை அகற்றி புற்றுநோயை எவ்வாறு தடுத்துக்கொள்ள முடியும் என்பது பற்றி அவர்களுக்கு அறிவூட்டும் பணியை அந்த வெளிக்கள சுகாதார பதவியணியிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும் நிவாரண சிகிச்சை சேவைகளை தற்போது சுகாதார நிறுவனங்களின் பணியாளர்களினால் வழங்கி வருகின்ற போதிலும் எதிர்காலத்திலே இச்சேவையினை வெளிக்களத்தில் விஸ்தரிப்பதற்க எதிர்பார்க்கப்படுகின்றது.

சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் புற்றுநோய் தடுப்பு மற்றும் ஒழிப்பு பற்றி பணியாற்றுகின்ற தேசிய மட்டத்திலான பிரதான நிறுவனங்களான தேசிய புற்றுநோய் தடுப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் (NCCP) ஊடாக புற்றுநோயைத் தடுத்துக்கொள்ளல், ஒழித்தல், முன்கூட்டியே இனங்காணல் சிகிச்சை சேவைகள் மற்றும் நிவாரண சிகிச்சைச் சேவைகளில் மிகவும் கஷ்டங்களுக்கு மத்தியில் மேற்கொண்ட சேவையினை உத்தியோகபூர்வமாக மதிப்பீடு செய்யும் பணிகள் முதல் முறையாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான பாராட்டுதல்களின் ஊடாக அவர்களது சேவையின் நற்தன்மையை அதிகரித்துக்கொள்ள முடியும்.

தேசிய புற்றுநோய் தடுப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் (NCCP) ஊடாக புற்றுநோயை தடுத்துக்கொள்ளல், இல்லாதொழித்தல், நிவாரண சிகிச்சை சேவைகளை வழங்கும் துறையில் மற்றும் சுகாதார நிறுவனங்களின் பதவியணியினை உத்தியோகபூர்வமாக பாராட்டும் வருடாந்த நிகழ்ச்சித் திட்டமொன்றினை அமுல்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன் முதலாவது விழா 2018 ஆம் ஆண்டின் இறுதி காலாண்டில் நடாத்தப்படுவதுடன், மேற்படி தலைப்புடன் தொடர்புடையவாறு 2017 ஆம் ஆண்டிலே மேற்கொண்ட ஆக்கத்திறனான மற்றும் தூய செயற்பாடுகளை மேற்கொண்ட நபர்களை / நிறுவனங்களை தெரிவுசெய்து அவர்களில் இருந்து சிறந்தவர்களை பாராட்டுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும் புற்றுநோயை இல்லாதொழித்தல் மற்றும் தடுத்தல் என்பவற்றின் நிமித்தம் புற்றுநோய் கண்காணிப்பு நடவடிக்கைகளின் முக்கியத்துவத்தை பாராட்டும் முகமாக அச்செயற்பாடுகளுக்குப் பங்களிப்புச் செலுத்துகின்ற அனைத்துத் துறைகளையும் பாராட்டுவதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**அதனூடாக பின்வரும் செயற்பாடுகளில் சிறந்து விளங்குவோரையும் பாராட்டுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.**

1. புற்றுநோய் சிகிச்சை நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்ட கண்காணிப்புப் பணிகள்
2. நோய்க்குறியியல் ஆய்வுகூடங்களில் மேற்கொள்ளப்பட்ட கண்காணிப்பு நடவடிக்கைகள்
3. பிறப்புச் சான்றிதழ், விவாக மற்றும் மரணப் பதிவாளர்களினால் மேற்கொள்ளப்படுகின்ற புற்றுநோய் காரணமான மரணங்களை பதிவு செய்தல், அறிவித்தல் என்பன தொடர்பான செயற்பாடுகள்
4. மருத்துவ பதிவு அலுவலர்களின் சேவைகள்

# முன்மொழிவுகளை சமர்ப்பிக்கும் முறை (வழிகாட்டல்கள்)

**விழாவின் நோக்கம்**

புற்றுநோய் தடுப்பு, ஆரம்ப கண்டறிதல், சிகிச்சைச் சேவைகளை வழங்குகின்ற சுகாதார பதவியணி மற்றும் புற்றுநோய்களின் கண்காணிப்புப் பணிகளில் பங்குபற்றுகின்ற சுகாதார மற்றும் சுகாதாரமல்லாத பதவியணியினரினால் மேற்கொள்ளப்படுகின்ற ஆக்கத்திறனான மற்றும் தூய செயற்பாடுகள் / பயன்பாடுகள் என்பவற்றினை இனங்காணலும் அவை தொடர்பாக அவர்கள் வழங்கும் பங்களிப்பினைப் பாராட்டுதலும்.

**பாராட்டுக்குரிய குழுக்கள்**

பிரதானமாக முக்கிய 2 பிரிவுகளின் கீழ் பாராட்டுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

பிரிவு I

1. தனிநபர்கள் அல்லது குழுக்கள்

தனிநபர் ஒருவரினால் அல்லது குழுவோன்றினால் மேற்கொள்ளப்பட்ட மேற்படி செயற்பாடுகள்

பிரிவு II

2. நிறுவனங்கள்

சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகம் / பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் / மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் / மருத்துவமனை அல்லது யாதேனுமொரு சுகாதார நிறுவனம் ஒன்றிற்கு இப்பிரிவின் கீழ் முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்க முடியும்.

அவ்வாறான தொழிற்பாடு ஒன்றிற்காக ஒரு பிரிவின் கீழ் மாத்திரமே முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்க முடியும்.

**முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதற்குத் தேவையான தகைமைகள் மற்றும் தகுதிநிலைகள்**

- ❖ அரசாங்க சுகாதார நிறுவனம் ஒன்றிலே பணியாற்றுகின்ற அலுவலர் ஒருவரினால் / அல்லது அலுவலர்களினால் அல்லது பணியாளர்களினால் குறித்த தொழிற்பாட்டினை 2017 ஆம் ஆண்டிலே விழாவின் நோக்கத்தினை அடிப்படையாகக் கொண்டு மேற்கொண்ட செயற்பாடொன்றாக இருத்தல் வேண்டும்.
- ❖ மேலே குறிப்பிட்டோர் புற்றுநோயை தடுத்தல் அல்லது சிகிச்சையளித்தல் பிரிவொன்றைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம்.
- ❖ முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்படுவது புற்றுநோய் கண்காணிப்புத் துறை சார்ந்ததாக எனின் மேற்படி பிரிவுகளுக்கு மேலதிகமாக பிறப்புச் சான்றிதழ், விவாக மற்றும் மரணப் பதிவாளர்களும் விண்ணப்பிப்பதற்கு தகைமை பெறுகின்றனர்.
- ❖ தொழிற்பாடுகளின் அல்லது கருத்திட்டத்தின் குறிக்கோள் சுகாதார மேம்பாடு, புற்றுநோய் தடுப்பு, ஆரம்ப கண்டறிதல், சிகிச்சை சேவைகள், நிவாரண சிகிச்சை சேவை முறைமைகள் அல்லது புற்றுநோயாளர்களின் தரவுகளை அறிவித்தல் என்பன தொடர்பாக அமைதல் வேண்டும்.

- செயற்பாடுகள் அல்லது கருத்திட்டம் ஆக்கத்திறன்மிக்க புதிய செயற்பாடொன்றாக இருத்தல் வேண்டும். அது தற்போது பயன்படுத்தப்படுகின்ற நாளாந்த முறைமைக்கு புறம்பாக மேற்கொள்ளப்பட்ட ஒரு செயற்பாடாக அமைதல் வேண்டும். அல்லது தற்போது செயற்படுத்தப்படுகின்ற முறைமையொன்று நவீன முறையில் மேற்கொள்ளப்படுகின்ற ஒன்றாக இருத்தல் வேண்டும். மேலும் புற்றுநோய் ஒழிப்பினை சுருக்கமாக உயர் நிலைக்குக் கொண்டுவரும் பொருட்டு மிகுந்த அர்ப்பணிப்புடன் மேற்கொண்ட ஒரு செயற்பாடாக இருத்தல் வேண்டும்.
- அலுவலர் ஒருவர் / அல்லது நிறுவனமொன்று ஒன்றுக்கு மேற்பட்ட முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்க முடியும். அச்செயற்பாடுகளை தனித் தனியாக முன்மொழிவுகளாக சமர்ப்பிக்க முடியும்.

**திறமைகளைப் பாராட்டுவதற்கான முறைமை**

ஒவ்வொரு பிரிவுகளின் கீழ் தேசிய மட்டத்தில் சிறப்பு வாய்ந்த 3 முன்மொழிவுகள் தேர்ந்தெடுக்கப்படும். மாகாண மட்டத்திலும் மேற்படி 2 பிரிவுகளின் கீழும் சிறந்த 3 முன்மொழிவுகள் வரையில் தேர்ந்தெடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

- இவற்றினை விட தேசிய மட்டத்தில் மற்றும் மாகாண மட்டத்தில் திறமை பாராட்டுக்களை வழங்குவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.
- தகுதி பெற்ற நிபுணதத்துவ சபையொன்றினால் முன் தயாரிக்கப்பட்ட முறைமை ஒன்றின் பிரகாரம் சிறப்புச் செயற்பாடுகள் தேர்ந்தெடுக்கப்படும்.
- தேர்வு சபையின் முடிவே இறுதித் தீர்மானமாகும்.

**தகவல் தொடர்பாடல்**

- தேசிய மட்டத்திலான சிறந்த செயற்பாட்டு விழா நடாத்தப்படுகின்ற சந்தர்ப்பத்தில் அவற்றினை சமர்ப்பிப்பதற்கு வாய்ப்பளிக்கப்படும்
- தேர்ந்தெடுக்கப்படும் முறைமைக்கேற்ப தேர்ந்தெடுக்கப்பட்ட சிறந்த செயற்பாடுகளை சமர்ப்பித்த முன்மொழிவுகள் நூலொன்றாக அச்சிட்டு வெளியிடப்படும்.

**எழுத்துமூல முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதற்கான வழிகாட்டல் (முறை)**

குறித்த முன்மொழிவினை சிங்களம், தமிழ் அல்லது ஆங்கில மொழியில் எழுத்து மூலம் சமர்ப்பிக்க முடியும்.

- அந்த முன்மொழிவு பற்றிய செயற்பாட்டின் தலைப்பு, ஆசிரியரின் பெயர், நன்றியுரை என்பன தவிர்ந்த 500 சொற்களுக்கு மேற்படலாகாது. ஆகக் கூடியது 2 தரவு அட்டவணைகளை உள்ளடக்க முடியும்.
- குறித்த முன்மொழிவில் பின்வரும் அம்சங்கள் உள்ளடக்கப்படல் வேண்டும்.

**தலைப்பு**

குறித்த செயற்பாட்டினை தெளிவாக பிரதிபலிக்கச் செய்யும் ஒன்றாக இருத்தல் வேண்டும்.

**ஆசிரியர்**

தனி நபர் குழுக்களின் முன்மொழிவுகளில் ஆசிரியர் தனி நபர் ஒருவராக இருத்தல் வேண்டும். ஏனைய முன்மொழிவுகள் தனி நபர் ஆசிரியர் பெயரில் அல்லது அதற்கு மேற்பட்டவர்களின் பெயர்களில் சமர்ப்பிக்க முடியும். செயற்பாட்டில் ஈடுபட்ட பிரதான நபர் ஒருவரின் பெயர் அதன் ஆசிரியராக உள்ளடக்கப்படல் வேண்டும்.டிபயர் மற்றும் அலுவலக முகவரி பின்வருமாறு குறிப்பிடல் வேண்டும்.

பெயர், பதவி, அலுவலகம்

உதாரணம் :

சமன் தென்னகோன், பொது சுகாதார பரிசோதகர், சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகம், கொஹுவலை.

**அறிமுகம்**

புற்றுநோய் தடுப்பு, கட்டுப்பாடு, நோயாளி பராமரிப்பு, நோய்த்தடுப்பு பாதுகாப்பு அல்லது கண்காணிப்புப் பணிகளுடன் உங்களது முன்மொழிவுகள் எவ்வாறு தொடர்புபடுகின்றன என்பது பற்றி உள்ளடக்கப்படல் வேண்டும்.

**நோக்கம்**

செயற்பாடுகள் மற்றும் கருத்திட்டம்

குறிக்கோள் அல்லது குறிக்கோள்கள்

**செய்முறை**

செயற்பாட்டின் செய்முறை பற்றிய விளக்கமொன்றினை வழங்குதல் வேண்டும்.

**பெறுபேறு**

இச்செயற்பாட்டின் அல்லது கருத்திட்டத்தின் மூலம் பெற்றுக்கொண்ட பெறுபேறு/பெறுபேறுகளைக் குறிப்பிடவும்.

**கலந்துரையாடல்**

மேற்படி செயற்பாட்டின் மூலம் அல்லது கருத்திட்டத்தின் மூலம் பெற்றுக்கொண்ட பெறுபேறுகள் இலங்கையில் புற்றுநோய் காரணமாக ஏற்படுகின்ற சிக்கல் நிலைகளைத் தீர்ப்பதற்கு எவ்வாறு பங்களிப்புச் செலுத்துகின்றன என்பது பற்றி விளக்கி அதனை எவ்வாறு தொடர்ச்சியாக பேணிவருவது என்பது பற்றி விளக்குதல் மற்றும் மேற்படி செயற்பாடு அல்லது கருத்திட்டத்தை செயற்படுத்துகின்ற போது இடைநடுவே முகம் கொடுத்த கஷ்டங்கள் மற்றும் தடைகள் பற்றிய விபரமொன்று.

**நன்றி**

குறித்த கருத்திட்டம் அல்லது செயற்பாட்டினை மேற்கொள்ளும் போது உதவி புரிந்த ஆசிரியராக குறிப்பிடாத வேறு குறிப்பிட வேண்டிய நபர்கள் இருப்பின்

**சான்றுகள்**

குறித்த கருத்திட்டத்துடன் தொடர்புடைய ஆவணங்கள் மற்றும் புகைப்படங்கள் என்பவற்றினை இணைத்தல் வேண்டும்.

**விண்ணப்பிக்கும் விதம்**

பின்வரும் படிவத்தினை நிறப்பி உரியவாறு பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்பவும் அல்லது நேரில் வந்து ஒப்படைக்கவும்.

**புற்றுநோய் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு முக்கியஸ்தர்களை கௌரவிக்கும் தேசிய விழா - 2018**
**தேசிய புற்றுநோய் ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டம்,**
**பொதுசன சுகாதாரக் கட்டிடத் தொகுதி,**
**இலக்கம் 555/5, எல்விட்டிகல மாவத்தை,**
**கொழும்பு 05**
**இலங்கை.**

கருத்திட்டத்துடன் தொடர்புடைய முன்மொழிவை சமர்ப்பிக்க வேண்டிய மின்னஞ்சல் முகவரி : nccp@health.gov.lk or director.nccpsl@gmail.com

மேலதிகத் தகவல்களைப் பெற தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்: 0112 368627

Dr. Anil Jasinghe
Director General of Health Services
Ministry of Health, Nutrition & Indigenous Medicine,
"Suwasiripaya"
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha,
Colombo 10.

டாக்டர் அணில் ஜயசிங்க
சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்

**பிரதிகள்**

பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனைவருக்கும்,
பணிப்பாளர், தேசிய புற்றுநோய் தடுப்பு நிகழ்ச்சித் திட்டம்,
பணிப்பாளர், தொற்றாத நோய்கள்,
பணிப்பாளர், பல் மருத்துவ சேவை,
பணிப்பாளர், மனநல சுகாதாரம்,
பணிப்பாளர், ஆரம்ப சுகாதார சேவைகள்
பணிப்பாளர், குடும்ப சுகாதாரப் பணியகம்,
மாகாண சமூக மருத்துவ நிபுணத்துவ அதிகாரிகள்,
மாகாண சமூக பல் மருத்துவ நிபுணத்துவ அதிகாரிகள்,
பிரதான மருத்துவ அதிகாரிகள் (பாடசாலை சுகாதாரம்),
பிராந்திய பல் அறுவை சிகிச்சை அதிகாரிகள் அனைவருக்கும்,
பிராந்திய பல் அறுவை சிகிச்சை அதிகாரிகள் அனைவருக்கும்,
மருத்துவ அதிகாரிகள் (தொற்றா நோய்கள்) அனைவருக்கும்,
மருத்துவ அதிகாரிகள் (தாய்மார் மற்றும் சிறுவர் சுகாதாரம்) அனைவருக்கும்,